# பெண்கள் பகிரங்கமாக பேசிக்கொண்ட விடையங்கள்.

| | |
|---|---|
| | |
| | |
| Sujet : | manamthiranthupesuvom |
| Date : | 21/06/01 00:56:42 Paris, Madrid (heure d'été) |

*From: pennkalnaam@yahoo.com (penn pennkal)*
*To: UMA109@aol.com, Santhush@aol.com, Jeyaruban@sympatico.ca, M1a2n3o4@aol.com, sarinigarsara@hotmail.com, mayurann@hotmail.com, SPremkumar@aol.com, Surgeryjaffna@mail.ewisl.net, anill77@usa.net, sunildesa07_1999@yahoo.com, thava.guru@c2i.net, Sriharan.sivasingraja@ism.uit.no, nirupa50@hotmail.com, exil-inba@infonie.fr, thulachi@langoo.com, Theva29@aol.com, thayanithi@yahoo.com, Tharshi@web.de, Susee@gmx.de, sumathy@bluewin.ch, Thamilachi@hotmail.com, sakthinorway@online.no, rra@freesurf.ch, Shanranjini@yahoo.com, Rajesbala@hotmail.com, Nragavande@yahoo.com, parthipan@gmx.net, Kpsingam@aol.com, EXILFR@aol.com, kodangi_ajj@yahoo.com, kamalasany@gmx.net, kalachuvadu@vsnl.com, praveen@bluewin.ch, exil.jeba@wanadoo.fr, Inparani@hotmail.com, genga_mu@yahoo.com, cheran@cheran.net, Bharathidasan@yahoo.com, bmt91@hotmail.com, Assaie@hotmail.com, Aazhiyaal@hotmail.com, sobasakti@hotmail.com, brigitte.huron@freesurf.fr, RAYAKARAN@aol.com, Subashini_kanagasundaram@hp.com, Karunah@hotmail.com, methiny@t-online.de, Sivarajan@t-online.de, Sivapalan@t-online.de, Puvi76@callnet.uk.com, Raathan@bathcom.com, KAVITHA2@aol.com, Ranjith72@hotmail.com, kudil35@hotmail.com, Psivagami@hotmail.com, ravis@connection.com, kani@freesurf.ch, Vishnu@rathinaiyer.freeserve.co.uk, reva@slt.lk, KKR2951774@aol.com, Shan04@infonie.fr, Jahirhus@hotmail.com, Puthiyathadam@yahoo.com, geswar@yahoo.com, rkandia@mailhost.tcs.tulane.edu, danieljeeva@sympatico.com, Pajayakaran@hotmail.com, digi@yesic.com, tbook@yesic.com, naalai@yahoo.ca, knavam@yahoo.com, JSinnatham@aol.com, pushpaa@37.com, csuganthi@hotmail.com, puthumai@yahoo.com, ssivajeede@yahoo.com, sarinihar@excite.com, Jayapalan@online.no, Nkannan@freenet.de, Mallika102@aol.com, nnirupa@yahoo.de, kanap@sprint.ca*

மனம திறந்து பேசுவோம்

தோழி றஞ்சினிககு!(பிராங்பேர்ட்)

எங்களில் பல தோழிகளுக்கு இலக்கிய அரசியல் தோழர்களாகப் பாசாங்கு செய்த ஆண் மேலாதிக்கவாதிகளால் வன்முறையும் அராஜகமும் செய்யப்பட்டபோது மௌனம் சாதித்துவிட்டு ஒரு பெண்ணுக்கு "ஜனநாயகமீறல்" செய்யப்பட்டது என்கின்ற குற்றச்சாட்டுடன் அல்லது விமர்சனத்துடன் இம்முறையாவது நீண்டகாலத்தின் பின் பெண்கள் சந்திப்பில் நேரில் கலந்து கொண்டு தட்டிக் கேட்டுள்ளீர்கள் இது எமக்கு மிகவும் சந்தோசத்தினைத் தந்தது தருகின்றது.

பெண்கள் சந்திப்பை ஜனநாயக உரிமை மீறல் அமைபபாக சர்வதேசரீதியாக காட்டி அரச இயக்க ஒப்பீடுகள் மூலம் ஆணகளினால் சேறடிக்கும முயற்சிகள், துண்டுப்பிரசுரங்கள் என்பவற்றிற்கு எங்கள் சக்தியை விரயம் செய்து பதில் எழுத வேண்டியதில்லை என நினைத்திருந்தோம் அத்துடன் ஆண்களுக்கு நியாய விளக்கம் கொடுப்பது எமக்கு அவசியமுமில்லை. அதுவே நாம் இத்தனை காலமும் மௌனமாகவிருந்தோம். ஆனால் உங்களின்

"பெண்கள் சந்திப்பில் பல பெண்களினால் விளக்கங்கள் கொடுக்கப்பட்டும் சிரிப்பிற்கிடமாக்கப்படுட்டுள்ளதாக உங்களால் முன்வைக்கப்பட்டுள்ள விடயத்தை மீண்டுமொருமுறை விளக்குகிறோம்".

பரிஸில் சென்றவருடம் பெண்கள் சந்திப்பு நடைபெற்றது. அந்தச் சந்திப்பினை இரு பெண்கள் ஒழுங்கு செய்திருந்தனர். ஜெபா. விஜி. இந்தப் பெண்கள் எக்ஸில் சஞ்சிகையிலும் அங்கம் வகிக்கின்றனர். இதனைவிட பெண்கள் சந்திப்பில் பலகாலமாக கலந்துவரும் தோழி லக்ஷ்மி இணைந்து செயற்படக்கூடியவராகக் கருதப்பட்டவர். இவர் உயிர்நிழல் ஆசிரியர் குழுவில் பங்குபெறுகின்றார். பெண்கள் சந்திப்பானது உயிர்நிழல் எக்ஸில் என்கின்ற பிரச்சினையிலிருந்து எந்த சம்பந்தமும் கொள்ளாது அனைத்துப் பெண்களையும் உள்ளடக்கிய ஒரு சுயமான சந்திப்பாகும். ஆதலால் நாம் எல்லோரும் பெண்கள் என்கின்ற வகையில் இணைந்து ஒற்றுமையாக செயற்படும் முயற்சியில் மேற்குறிப்பிட்ட இருபெண்களுடன் இணைந்து செயற்படமுடியுமா என்று லக்ஷ்மியிடம் கேட்கப்பட்டபோது லக்ஷ்மி மறுத்துவிட்டார். இது அவரது உரிமையே என்று நாம் கருதியதால் மேலும் எந்த முயற்சிகளும் நடைபெறவில்லை பின்னர் இந்த சந்திப்பை தோழி லக்ஷ்மி தனது சஞ்சிகை முரண்பாடு காரணமாக "பகிஸ்கரித்தார்" பெண்கள் சந்திப்புத் தோழிகளுக்கு எதுவும் எழுதவும் இல்லை தெரிவிக்கவுமில்லை. இதுவும் அவரது உரிமையே என்று நாம் பேசாமலேயே இருந்தோம்..

ஆனால் இங்கு பங்குபற்றிய தோழி சுபாவிடம் அங்கு நடைபெறும் விடயங்களை பதிவுசெய்ய கசட்டுகளை கொடுத்துவிட்டிருந்தார். சிலபெண்களுக்குத் தெரியவந்ததும் இங்கு சமூகமளிக்காத பெண்ணாகிய லக்ஷ்மிக்கு விடயங்கள் நேரடி உரைகளாக கொண்டு செல்லப்படுவது விரும்பப்படவில்லை. அங்கு சமூகமளித்த தமது தனிப்பட்ட பிரச்சனைகளைதமது சொந்தவாழ்க்கைப் பிரச்சனைகளை பேசிய (தங்களது துணைவர்களாலும், சுற்றங்களாலும் பட்ட. படும் துன்பங்களை உணர்வு ரீதியாக சொன்ன) பெண்களும் இதனை விரும்பவில்லை என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டதால் கசட்டில் உள்ள விடயங்களைத் தொகுத்து லக்ஷ்மியிடம் கொடுக்கலாம் என்றும் அபிப்பிராயங்கள் கூறப்பட்டன. இங்கு சமூகமளித்திருந்த 23 பெண்களில் யாருமே இதற்கு முன்வராததால் எந்த ஒரு மாற்றுக் கருத்துமின்றி கசட்டுக்கள் கொடுககப்படுவதில்லை என்று ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு லக்ஷ்மிக்கும் அந்தமுடிவு தெரிவிக்கப்பட்டது. (இந்த இடத்தில் வேறு பெண்ணாக இருந்து அவர் சந்திப்பிற்கு சுகயீனம் காரணமாக வரமுடியாமல் போனாலும் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் ஒரு பெண் தனது கருத்து பதிவுசெய்யப்படக்கூடாது அல்லது சமூகமளிக்கப்படாத ஒருவருக்கு சென்றடைவதை விரும்பவில்லையெனில் அது பங்குபெறும் பெண்களால் எற்றுக்கொள்ளப்பட்டு பதிவுசெய்வது நிறுத்தப்படும். இம்முறை பேர்லினில் நடைபெற்ற சந்திப்பிலும் இப்படியொரு பெண் கேட்டுக்கொண்டதால் பதிவுசெய்யப்படுவது அனைவராலும் நிறுத்தப்பட்டதினை பார்த்தனீர்களதானே. இதனையே ஜனநாயகம் என்று நாம் கருதுகின்றோம்)

இதனை அராஜகம், ஜனநாயக மறுப்பு என்று நீங்கள் கூறும் கருத்துடன் நாம் எந்தவகையிலும் உடன்படவில்லை.

தோழியே உம்மை ஒன்று கேட்கவிரும்புகிறோம்: பெண்கள் சந்திப்பை பகிஸ்கரித்த ஒரு பெண்ணினால் கொடுக்கப்பட்டு பதிவு செய்த கசட்டை கொடுக்க மறுத்ததை ஜனநாயக மறுப்பு, அராஜகம் என்று கூறும் நீங்கள் இருபத்தி மூன்று பெண்களும் இணைந்து எடுத்தமுடிவினையும் இவர்கள் கருத்துச் சுதந்திரத்தினையும் மறுப்பதுதான் எந்தவகை ஜனநாயகத்தைச்சேரும்?

எமது விடயங்களில் ஆண்கள் தலையிடுவதை அனுமதிக்க கூடாது என்று தெரிவிக்கும் நீங்கள் இணையத்தளம் ஊடாக உங்கள் கடிதத்தினை அனுப்பி வைத்தது முரண்நகையாக இருக்கிறது. உங்களின் இவ்வகை அணுகுமுறையானது ஆண்களின் தலையீடுகளுக்கு மறைமுக அங்கீகாரத்தை வழங்குவதாகவே நாம் கருதுகிறோம்.

கருத்துக்களில் ஒருபக்கச்சார்பும் விடயங்களை திட்டமிட்டே மறைப்பதாகவுமே இருப்பதால் "பெண்கள் சந்திப்பு" குழுவாத சகதிக்குள் முடங்கிவிடக்கூடாது என்கின்ற ஒரே காரணத்திற்காகவும் எமது கருத்துக்களை முன்வைக்கிறோம்.

பெண்கள் சந்திப்பு, மற்றும் பெண்கள் சந்திப்புமலர் போன்ற செயற்பாடுகள் உட்பட பெண்கள் நாம் சுயமாக இணைந்து செயற்படும் ஒவ்வொரு நடவடிக்கையும் எமது உரிமைசார்ந்த போராட்டததினை உள்ளடக்கியது.. இந்தவகையில் தான் பெண்கள் ஏன் தனித்து சந்திக்க வேண்டும் என்று ஒருசாராரினதும், பெண்களுக்கு அரசியல் அறிவு போதாது சரியான வழிநடத்தல் இல்லை என்று இன்னொருசாராரினதும் அங்கலாய்ப்புக்களும் வரத்தான் செய்தன. நாம் பெண்கள் சந்திப்பை ஆரம்பித்த நாள் முதல் ஆண்களிடமிருந்து கடிதங்கள் வந்ததுடன் சஞ்சிகைகளிலும் கேவலமாகவும் எழுதப்பட்டது. நாம் இந்த சவால்களை எல்லாம் முகம் கொடுத்து பத்து வருடங்களை கடந்தும் பெண்கள் சந்திப்பினை நடத்தி வருகின்றோம். இதில் கருத்துக்களை பரிமாறிக்கொள்வது என்று மட்டுமில்லாமல் பிழைகள் நடைபெறுவதாக உணரப்படும்போது பெண்கள நாமே தோழமையுடன் எடுத்துக்கூறுவதும் எதிர்த்துப்போராடுவதும் மிகவும் ஆரோக்கியமான விடயம் தான். ஆனால் 19,20வது பெண்கள் சந்திப்புக்கள் பற்றி துண்டுப்பிரசுரங்கள் இணையத்தளம் மூலம் கடிதப்பரிமாற்றங்கள், வதந்திகள், டெலிபோன் கிசுகிசுக்கள் என்று தொடருகின்றன.

இந்த வகையில் லக்ஷ்மியிடம் 'பறிக்கப்பட்டதாக மொழிபெயர்க்கப்பட்ட சம்பவம்பற்றி நீங்கள் உட்பட லக்ஷ்மியும் நேரில் கலந்துகொண்டு எம்முடன் விவாதம் நடத்தியது வரவேற்கத்தக்கது.. இப்படியான நேரடியான விவாதங்களும், எமக்குள்ளான கருத்துப்போராட்டங்களும் எம்மை வளர்த்துக்கொள்ள உதவும் என்பதில் ஐயமில்லை.

பரிசில் நடைபெற்ற பெண்கள் சநதிப்பில் 'கசட'' பறிக்கப்பட்டதாக கூறப்பட்டு எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு எம்மைப் பொறுத்தவரையில் பேர்லினில் நடந்த சந்திப்பில் பதில் வழங்கப்பட்டது.. "பறித்தது" என்ற வார்த்தைப்பிரயோகம் உட்பட "அராஜகம்" என்பது வரையான கருத்துக்கள் பரிஸ சந்திப்பில் கலந்துகொண்ட பெண்களால் நிராகரிக்கப்பட்டு அதற்கான விளககமும் சரியாகக் கொடுககப்பட்டது. மாறாக சிரிப்பிற்கிடமாக்கப்பட்டது என்று கூறுவது எந்தவகையிலும் உண்மையாகாது. விவாதம் சரியான பண்பில் நடைபெறவில்லை. என்பதற்கு நாம் எல்லோரும்தான் பொறுப்பேற்கவேண்டும்.

இந்தப் பத்துவருடகாலத்தில் பெண்கள சந்திப்பிற்கூடாக சில விடயங்களையாவது நாம கற்றுத்தான் உள்ளோம். மாற்றுக் கருத்துகளுக்கு இடமளித்தல். மாற்றுக் கருத்துகள் பற்றி விவாதங்கள்..... இங்கு பெண்கள் கோபப்படுவார்கள், விவாதிப்பார்கள். முரண்படுவார்கள். முரண்பட்டு வெளியே செல்வார்கள் பின் இணைவார்கள (நீங்கள் விவாதத்தின்போது கோபத்துடன் எழுந்துசென்றதும் பின் திரும்பிவந்ததும் இதற்கு ஒரு சின்ன உதாரணமாகும்) இங்குவரும் பெண்கள், பெண்கள் சந்திப்பை திட்டலாம். இந்த உரிமைகூட எங்களுக்கு இருக்கிறது. உதாரணமாக "இலக்கியச் சந்திப்பில் உங்களுக்கு அதிக ஜனநாயகம்" இருக்கிறது என்றும் இதனாற்தான் பெண்கள் சந்திப்பிற்கு நீங்கள் வராமல் இலக்கியச்சந்திப்பிற்குப் போகவிரும்புவதாகவும் அந்தத் தருணத்திலாவது உங்கள் முரண்பாட்டை ஒரு பக்கமாக முன்வைத்தீர்கள்.. (தெரிவுகள சுதந்திரமானவை ஒவவொருவரும் தமக்கு ஏற்புடையவற்றுடன தம்மை அடையாளபபடுத்திக் கொள்ளலாம். ஆண்கள் பெரும்பான்மையாக அங்கம் வகிக்கும் இலக்கியச்சந்திப்புடன் பெண்கள் மட்டும் பங்கு கொள்ளும் பெண்கள் சந்திப்பை ஒரே தளத்திற்கு இருத்தி ஜனநாயக ஒப்பீடு செய்த நோக்கம் சந்தேகப்படக் கூடியதாகவே இருக்கிறது) எங்களுக்கு இந்தக் கருத்துடன் உடன்பாடு இல்லாவிட்டாலும் இபபடியொரு கருத்தை உருவாக்கிவைத்திருக்கவும் இதனை பெண்கள் சந்திப்பில் கூறவும உங்களுக்கு உரிமை இருககிறது.

உங்கள் கடிதத்தில் ஒருவருடமாக வெளியில் வராத பிரச்சினையை
வெளிக் கொண்டு வருவதற்காக மூவ் (ஆழமுளந) ன் துண்டுப்பிரசுரம்
உதவியுள்ளதென மெச்சியுள்ளீர்கள். 20 வது பெண்கள் சந்திப்பில்
கவைபால டியஉம என்ற நோட்டீஸை மண்டபம் செல்லும் வழியெல்லாம்
ஒட்டியும் இருந்தது மட்டுமல்லால் மொட்டையாக ஒரு பெண்ணிடம்
கசட் பறிக்கப்பட்டதாக எழுதப்பட்டு அவ் நோட்டீஸ்
வெளியிடப்பட்டுமிருந்தது. திட்டமிட்டு வேண்டுமென்றே பெண்கள்
சந்திப்பின்மேல் சேறு பூசுவதற்காகவும் அத்துடன் பெண்கள்
சந்திப்பு பற்றி ஒரு தப்பபிராயத்தை ஏற்படுத்துவதற்குமே
முனைந்தார்கள். ஆனாலும் நாம் ஆணாதிக்க தலையீடுகளை
பொருட்படுத்தாமல் பெண்கள் சந்திப்பை நடத்தினோம்...இதுவரை
தம்மை வெளிப்படையாக இனங்காட்டாமல் "திரியில்" விட்டுக்
கொண்டிருக்கும் த மூவ் அமைப்பின் முகமூடி பின்னால் பாரதிதாசன்,
அசோக் ஆகியோர் உள்ளதாகவே ஊகங்கள் எழுகின்றன. 19 வது
பெண்கள் சந்திப்பில் லக்சுமியிடம் கசட் பறிக்கப்பட்டதென்று
பெண்கள் சந்திப்பில் கலந்து கொண்ட, கலந்து கொள்ளாத
தோழிகளுக்கு தொலைபேசி மூலம் இவர்கள் தொடர்பு கொண்டு மூக்கை
நுழைத்ததை ஒரு ஆண்மேலாதிக்க தலையீடாகவே நாம் கருதுகிறோம்.
பெண்கள் சந்திப்பில் ஆண்களின் தலையீடுகளை நாம் என்றைக்கும்
அனுமதிக்கப் போவதில்லை அது மட்டுமல்ல எமது பெண்கள்
சந்திப்பிற்குள் ஏற்படும் முரண்பாடுகளை இவர்கள் முன்னிலையிலோ
தலைமையிலோ அல்லது இவர்களுடனோ விவாதிக்கவும் போவதில்லை.
பெண்கள் சந்திப்பு சுயாதீனமானது என்பதை மீண்டும் ஒருமுறை
கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

"நீங்கள் உங்கள் கடிதத்தினை எல்லோருக்கும்
அனுப்பியுள்ளபடியாலேயே நாமும் எமது பதிலையும் எல்லோருக்கும்
அனுப்புகிறோம்". எதிர்காலத்தில் எமது விவாதங்கள்
எமக்கிடையில் மட்டுமே நிகழும்.

தோழிகள்
நிருபா, மல்லிகா, உமா, தேவா, விஜி, ஜெபா, றஞ்சி

Do You Yahoo!?
Get personalized email addresses from Yahoo! Mail - only $35
a year! http://personal.mail.yahoo.com/

| | |
|---|---|
| Sujet : | Nirakarikappattakadithangal |
| Date : | 04/06/01 18:40:01 Paris, Madrid (heure d'été) |
| De : | UMA109 |
| A : | KAVITHA2, methiny@t-online.de, pajayakaran@hotmail.com, karunah@hotmail.com, Puvi76@callnet.uk.com, Ranjith72@hotmail.com, Rathan@bathcom.com, RAYAKARAN, Shan04@infonie.fr, Sivapalan@t-online.de, Kudil35@hotmail.com |

சக்தி,எக்ஸில், அம்மா, காலம்,அசை, சமர் ஆகிய சஞ்சிகைகளுக்கும் மற்றும்புகலிட இலக்கியத்தில் ஈடுபாடு கொண்ட அனைவருக்கும்.

உயிர்நிழல் இதழ் 17ல் வெளியான □போதை கழற்றிய போர்வை□என்ற குறிப்பில் லக்சுமியினால் வெளியிடப்பட்ட கருத்துக்களுக்கு எம்மால் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள எதிர்வினைகள்அனுப்பிவைக்கப்பட்டன. ஆனால் சமீபத்தில்வெளிவந்திருக்கும் இதழ் 18ல் □ உண்மைக்குப் புறம்பான, திரிக்கப்பட்ட தகவல்களைக் கொண்டு எழுதப்படும்கடிதங்களை □உயிர்நிழல்□ தவிர்த்துக்கொள்கிறது.□ என்ற குறிப்புடன் எமது விமர்சனக் கடிதங்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

இச்செயலை நாம்ஜனநாயகமற்றதும், கருத்துச்சுதந்திரத்திற்கு எதிரானதாகவுமே கருதுகிறோம்.
நாம் லக்சுமியுடன்கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவே விரும்பினோம்.
எமதுவிமர்சனங்களைப் பிரசுரித்துவிட்டு, அதன்பிறகு வெளிப்படையான கருத்துப்பரிமாற்றத்தைஉருவாக்கியிருக்கலாம். அதைவிடுத்து எமது கருத்துக்களை வெளிவராது தடைசெய்தது ஜனநாயக கருத்துச் சுதந்திர மறுப்பே.

இக்கடிதங்கள்பற்றிய உங்கள் கருத்துக்களை நாம் எதிர்பார்க்கிறோம்.

தேவா(ஜேர்மனி), உமா(ஜேர்மனி)

குடபுறகவிண்டால் தன்முகத்திலே...

ஜன-பெப். 2001 உயிர்நிழலில் போதை கழற்றிய போர்வை என்ற தலைப்பில் லக்சுமிகொட்டியிருக்கும் காழ்ப்புணர்வு குமட்ட வைக்கிறது. சனதருமபோதினி வெளியீட்டு விழாவில் கலந்துபங்கு கொண்டவள் என்ற உண்மையாலும் பத்திரிகை தர்மம் என்றால் அது தவறான செய்திகளைகேள்வியுற்றால் அதனை வெளியிட முன் ஆராய்ந்தறிந்த பின் பதிப்பித்தல் சமூகபொறுப்புள்ள ஒருபத்திரிகை ஆசிரியருக்கு தேவை என்பதை அறிவுறுத்தியும் பின்வரும் விளக்கங்களை தருவது என்கடமையாகிறது.

??? பாலியல் நிந்தனைச்சொற்கள் பாவிக்கப்பட்டதாம்.

நிசம்.1 -பங்குபற்றிய பல ஆண்கள் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டி நாயபட்டமும் கொடுத்து மாறிமாறிஉரைத்துக் கொண்டது அங்கு நடைபெற்றது. நாய்நிந்தனை இப்படி ஒருவாறாக நிறைவெய்தியபின், சனதருமபோதினியை வெளியீட்டுக்கு முன்பாகவேவாசித்துவிட்டு, அதனை விமர்சிக்க வேண்டும் என்ற மூர்க்கத்தோடு வந்திருந்தவர்களில்ஒருவரான கற்சுறா சாருநிவேதிதாவின் கதையில் கையாளப்பட்டிருந்த ஆண்பெண்பாலுறுப்புச் சொற்களைசுட்டிக்காட்டி கோதித்தார். புஸ்பராஜா அதற்கும் மேலே ஒருபடி போய் அக்கதையில் விலாவாரியாகவருணிக்கப்பட்டிருக்கும் பாலியல் உறவொன்றை மிக விஸ்தாரமாக வாசித்தார். சாருவின் எழுத்தில் ஆண்குறியும், யோனியும்(சாதகத்தில் யோனிப்பொருத்தம் என்று ஒன்று காலம் காலமாக இருப்பதைப் பற்றி ஏன் கேள்வியெழுப்பப்படுவதில்லை?) பாலியல் உறவும் படும்அல்லோலகல்லோலமும் கொஞ்ச நஞ்சமல்ல. அந்தக் கதைக்குரிய விமர்சனம்தான் அங்குகையாளப்பட்டது. பெண்ணை இழிவு படுத்தும் பாலியற் சொறகள் அங்கு பாவிக்கப்படவில்லை. ஆகவிடயம் கதைக்குள் இருக்கும் போது, உரையால்களில் தூசண வார்த்தைகள் பாவிக்கப்பட்டனஎன லக்மியின் காதுக்குள் போயிருக்கிறதன் அதிசயம் என்ன?
பங்குபற்றியவர்களுக்கு புரிந்த இந்த உண்மை லக்சுமிக்கு தெரியவேண்டியிருப்பின்உரையாடல்களை பதிவுசெய்தவர்களுக்கு டேப்பைக் கேட்டு ஒரு மனுப்போட்டுப் பாக்கலாம்.

??? பலரும் போதையில் இருநததால் தூசணவார்த்தை பாவிக்கப்பட்டதாக சமாதானம்கூறப்படுகிறதாம்.
நிசம்-2 போதையாலேதான் தூசணவார்த்தை வரும் என்ற விடயம் யாருக்குமே காது குத்தும்கதை. மதுவெறிக்கும் இவ்வார்த்தைப் பிரயோகத்திற்கும் சமரசம் செய்யப்பட்டுள்ளது. வெறியில் உளறுகிறான் என்று சமாதானங்கள் வேறு.பாலியல் நிந்தனைச் சொற்கள் பல சந்திப்புகளிலும் பேசப்பட்டுள்ளன. இதனை எத்தனைஇலக்கியகாரர்கள் இல்லை என்று சொல்லுவர்? முன்னர் நடநதவைகளெல்லாம் எந்தப் போர்வைக்குள் புகுந்தனவாம். நிகழ்வுகளுக்குமுன்னமேயே போதை ஏறிவிடுவது சனதருமபோதினி வெளியீட்டில்தானா புதிதாக நடநதது?(இவ்விடத்தில் இது விவகாரத்தை நிறுத்துகிறேன். விபரிக்க வெளிக்கிட்டால்எல்லாப்பக்கத்திலும் நாறலாம்.) இவ்வெளியீட்டுக்கு வந்திருந்த புதுமுகங்களுக்கு இந்தஇலக்கியகாரர்களின இலக்கியநயம் புரிய என்ன ஞாயம் உண்டாம்.

??? இந்தப்பெண்கள்... பெண்ணடிமைத்தனம்...விளிம்புநிலை மக்களுக்கான போலியானபோர்க்குரல்?

நிசம்-3 இக்கூட்டத்தில் கலந்து கொண்ட பெண்கள் லக்ச்மியோடு சேர்ந்தேபெண்ணடிமைத்தனத்துக்கு எதிராகஎப்போதும் கைகோர்த்தவர்கள். இன்னும்போர்க்குரல் எழுப்பிக் கொண்டிருப்பவர்கள். எழுப்பியவர்களைத் தூங்கவைக்க முடியாது.
பாலியல்நிந்தனைச் சொற்கள் அங்குபாவிக்கப்பட்டதாம் என்ற வதந்தியை மட்டும் பற்றிக்கொண்டு நிகழ்வுக்கு வந்திருந்தபெண்களை சாடியிருப்பது தனிப்பட்ட காழ்ப்புணர்வேயன்றிவேறில்லை.

நிசம்-4. இன, வர்க்க ரீதியாய், சாதிக்கொடுமையால், சமய அடக்குமுறையால்ஒடுக்குபவர்களுக்கெதிராக பெருங்குரலாகி அக்கறைப்படுவதும், செயல்படுவதும் பெண்ணியத்தின்கூறுகளில் ஒன்று. விளிம்புநிலை மக்களுக்காக புகலிடத்தில் குரல் எழுப்பியிருக்கும்இச்சிறியதுளியில் பெண்ணுரிமைவாதிகளும் கலந்துகொண்டு தம்பங்கினை செலுத்தியதை எப்படி போலிப்போர்க்குரலாக கூறமுடிகிறது? சனதருமபோதினிஅறிமுக நிகழ்வில் கலந்துகொண்ட பெண்கள் குரல் போலிக்குரலானால இலககிய, பெண்கள்சந்திப்பில் கலந்துகொள்ளும் முகங்களும் போலியே.

??? மேற்படி நிகழ்வுக்கு ஒரு பெண்தலைமை தாங்கியது. பெண்பாலியல் கவர்ச்சி,பெண்ணிய (தத்துவார்த்த) போலிக்கவர்ச்சி நோக்கிலோ...

நிசம்-5 கூட்டத்துக்கு தலைமை தாங்கியவர் தேவதாஸ். இது அழைப்பிதழிலும் காணப்பட்டது.(விசேடமாக உயிர்நிழலுக்கு அழைப்பிதல் கிடைக்காததால இத் தவறு) புத்தக வெளியீடு தேவா என்றுஅதில் போட்டிருந்ததை லக்சுமி கண்டிருக்க நியாயமில்லைதான்.

பெண்பாலியற் கவர்ச்சி ஒருதலைமை தாங்குதலுக்கு தேவைப்பட்டிருக்கிறது என அர்த்தம் கொடுக்கப்பட்டிருந்தால்,இப்படித்தான் இன்றுவரை தலைமை தாங்க இலக்கியச் சந்திப்பிலும், மற்றைய இலக்கியநிகழ்வுகளிலும் பெண்கள் அவ்வாறுதான் பயன்படுத்தப்பட்டனரா? இக்கேள்வி எல்லாப் பெண்ணியவாதிகளையும் குறிக்கிறது. இனிமேல்இலக்கியக் `கூட்டங்களுக்கு பெண்கள் தலைமை தாங்க வந்தால் அது பாலியல்பெண்கவர்ச்சிக்கும், விளம்பர வெற்றிக்குமே என லக்சுமி கூறியிருப்பதை பெண்களேகவனியுங்கள். மிககண்டனத்துக்குள்ளாக்கப்படவேண்டிய இவ்வார்த்தைப் பிரயோகத்தை லக்ஃமி வாபஸ் வாங்க வேண்டும்.

பெண்ணியவாதியாக பிரகடனப்படுத்திக் கொள்ளுவதில்எனக்கொன்றும் அக்கறையில்லை. ஒடுக்கப்பட்டவர்களில் ஒரு அங்கமாகிய பெண்களுக்காகபோராடுவதில் என்பங்கினை கொடுப்பதுதான் என் கொள்கை. மேற்படி கூட்டத்தில்பேசப்படாதவைகளை தனக்கு எதிரணியில் உள்ளவர்கள் கலந்து கொண்டார்கள் என்ற ஒரேயொருபழிதீர்க்கும் காரணத்தை வைத்து பாலியல்நிந்தனைச் சொற்கள் பாவிக்கப்பட்டதாக பொறுப்பற்றதன்மையில் சஞ்சிகையின்ஆசிரியரே சாடியிருப்பது அநாகரிகம். ஆண்கள்பாலியல் வார்த்தைகள் பாவித்தபோது அங்கிருந்த பெண்கள் தாம் அழைக்கப்பட்டிருந்ததற்காக வாயை மூடிக்கொண்டிருந்தார்கள்.அதாவது அங்கு சமூகமளிப்பதற்காக என்ன விலையும் கொடுக்க அவர்கள் தயாராய் இருக்கிறார்கள் எனவசைபாடியிருப்பது கண்டிக்கப்பட வேண்டியது. வேண்டாதவரை தாக்கவேண்டுமென்பதற்காக, அவனுக்குமேலே வேண்டாத பழிகளை ஏற்றி, தூற்றுவதும் அதிகாரபோதையில் இருப்பவனுக்குரிய சாகசம்.நியாயத்துக்கு, உரிமைக்கு, நீதிக்கு, உண்மைக்கு போராட வேண்டி கங்கணம்கட்டிக்கொண்டவர்களும், கிசுகிசு சம்பவங்களைப் போடும் மலின சஞ்சிகைகளின் தரத்துக்குஇறங்கியிருப்பது கேவலம்.

தேவா (ஜேர்மனி)

அன்புடன் லக்ஷ்மிக்கு,

உங்கள் □போதைகழற்றிய போர்வை□பற்றி உயிர்நிழலினூடாக உங்களுடன் தோழிமையுடன் சில கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவிரும்புகிறேன். பரிசில் நடைபெற்ற சனதருமபோதினி வெளியீட்டு விழாவிற்கு உங்களைப்போலவே நானும் செல்லவில்லை. அக்கூட்டத்தில் பெண்களை அவமதிக்கும் தூஷண வார்த்தைகள்பாவிக்கப்பட்டிருந்தால அது நிச்சயமாக விமர்சிக்கப்படவேண்டியதாகும்.இக்கூட்டத்திலேலேயே எதிர்க்கப்பட்டிருக்கவேண்டும்.( உங்களுக்கு தகவல் தந்தவரும் இதைநிச்சயம் செய்திருக்க வேண்டும்)

அக்கூட்டத்திற்குச் சென்ற சில தோழிகளிடம் இது பற்றி வினவிய போது . அங்கு தூஷணம் பேசப்படவில்லையெனக் கூறினார்கள்.அவர்கள் வார்த்தையில் எனக்கு நம்பிக்கையுள்ளது. அக்கூட்டத்தில் கலந்து கொண்டோரிற்சிலர் ஒருவரையொருவர் நாயே என விழித்துக் கொண்டதாகவும் ( நாய் தூஷண வார்த்தையல்ல.நாம் அப்படிக் கொள்வோமாயின் மனிதரை விட நன்றியுள்ள அந்த அப்பாவி மிருகத்திற்கு நாம்துரோகம் செய்கிறோம) , அத்தொகுப்பில் வெளியான சனருநிவேதிதாவின் □உன்னத சங்கீதம□; என்ற அபத்தமான கதை(?)யில் யோனிபற்றி எழுதியிருப்பதற்கு புஸ்பராஜவும், கற்சுராவும் விமர்சனம் வைத்ததாகவுமே நான் கேள்விப்பட்டேன். யோனி எமது உரித்து. எமது உடலின்அங்கம். இதை நாம் தூஷணமாக எடுத்துக்கொள்ளலாமா? எமக்குச் சொந்தமானபொருளொன்னைப் பற்றி ஆண்கள் பரிகசிப்பதும், அதையொரு பண்டமாகப் பாவிப்பதையும் நாம்எதிர்க்கவேண்டும். அக்கூட்டத்தில் ஆண்கள் மட்டுமே இக்கதையை விமர்சித்ததுகவலைக்குரியதுதான். எனக்குகேள்விப்பட்டவற்றை வைத்து எழுதுவது சிறிது பயமாகத்தான் உள்ளது. (கேள்விச் செவியன் ஊரைக்கெடுத்தான் என்றொரு பழமொழி உண்டல்லவா?நானும் நீங்களும சேர்ந்து ஊரைக் கெடுக்காமல் இருக்க முயற்சிப்போம்.)

இவை ஒருபுறமிருக்க . . .

உங்கள் விமர்சனத்தில் நீங்கள் குறிப்பிட்டிருந்த இரு விடயங்கள் என்னைக் கோபத்திலும் அதேசமயம் வேதனையிலும்ஆழ்த்தியது.

நிகழ்ச்சிகளுக்கு பெண்கள் தலைமைதாங்குவது முதலாளித்துவத்தின் விளம்பர வெற்றி அல்லது பெண்ணிய (தத்துவார்த்த) போலி கவர்ச்சி நோக்கிலா எனக்கேள்வியெழுப்பியுள்ளீரகள்.
ஆண்களே கூட்டம் கூட்டி, அவர்களே தலைமைதாங்கி, அவர்களே பேசி அவர்களே விமர்சித்து, நடைபெறும் நிகழ்வுகள்தானே காலகாலமாகநடைபெற்றுவருகின்றன. இவை பெண்களுக்குச்சம்பந்தமற்ற விடயங்களாகத் தானே கருதப்படுகிறது. பெண்ணைப்பற்றிக் கதைத்தாலும் நாம் தானகதைப்போம். பெண் விடுதலை பற்றியும் தமக்குத் தான் தாத்துவார்த்த ரீதியாகத் தெரியும்என்று தானே ஆண்களின் மண்டைக்குள் இன்னும் இருக்கிறது.
பெண்களும் நிகழ்சிகளை நடத்தலாம். எம்மாலும் தலமை தாங்கி ஒரு நிகழ்வை நடத்தமுடியும் ஆண்களுக்குச் சரிநிகராகவிவாதிக்கமுடியுமென்று நாம் நிருபிக்கத்தொடங்கிவிட்டோம். புகலிடத்தில் நடைபெறும் இலக்கியச்சந்திப்பில் ஆரம்பத்திலிருந்துபெண்கள் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதும், கருத்துத் தெரிவிப்பதும் ஒருபோராட்டமாகத தானேயிருந்தது. ஏனைய நிகழ்ச்சிகளை ஆர்வத்தோடு அமைதியாக செவிமடுத்துக்கொண்டிருப்போர்.பெண்விடுதலை சம்பந்தமான நிகழ்ச்சிகள் ஆரம்பித்தவுடன் ஒரே மறுப்பும், சத்தமும்,பரிகாசமும். இவையெல்லாம் தாண்டி நாங்கள் நிகழ்ச்சிகளை நடத்தினோம். கருத்துச்சொன்னோம் .தலமை தாங்கினோம். இவையெல்லாம் முதலாளித்துவ விளம்பர வெற்றியா? அல்லதுபாலியல் கவர்ச்சியா? அப்படி நினைத்திருந்தால் இந்நிகழ்ச்சி செய்த ஒரு பெண்ணும் நிச்சயமாகக் கலந்துகொண்டிருக்கமாட்டாள். ஏனாம் பத்து வருடங்களிற்கு மேலாக பெண்கள் சந்திப்பைத் தனித்து நடாத்திவரவில்லையா? எத்தனையோ தடைகள்? எத்தனையோ கேள்விகள்?எத்தனையோ கேலிகள்? லேடிஸ் கிளப் ஆகாமல் பார்த்துக் கொள்ளுங்கோ என்ற ஆண்களின்அடவைசுக்கள் ? இதை நாம்விளம்பரத்திற்காகவா செய்கிறோம்? பெண்களுக்கு நிகழ்ச்சிகள் கொடுக்கவேண்டுமென்று சம்பிரதாயமாக ஒரு நிகழ்சசிகொடுக்கபபடும் நிகழ்வுகளும் உண்டு. இந்த பிச்சை போடும் செயலை நான் வெறுக்கிறேன்.பெண்கள் பெண்கள் தொடர்பான விடயங்களில் மாத்திரம் தான் கருத்துத்தெரிவிக்கவேண்டுமென்ற அவசியமில்லை. ஆனால் நாம் இச்சமூகத்தில் ஒரு அங்கம். நாம்இரண்டாந்தரபிரஜையாக நடத்தப்படுகிறோம். நாம் இச்சமூகத்தில் ஒடுக்கப்படுகிறோம்.ஆகையால் எம்மைப்பற்றிக் கதைக்க , அதுவும் எம்மை ஒடுக்கும் இச்சமூக அமைப்பில் ஆதிக்கநிலையிலிருக்கும்சமூகத்தின பிரதிநிதிகளான ஆண்களுடன் சரிக்குச்சமன் உட்கார்ந்து எம்மை ஒடுக்கும் காரணிகள் பற்றி கதைப்பதுமுக்கியமல்லவா?
இவையெல்லாம் நான் சொல்லித்தான உங்களுக்குத் தெரியவேண்டுமென்பதில்லை.

அடுத்து . .
□போததிற்கு இவர்கள் தங்களைப்பெண்ணியவாதிகள் என்றும் அறிமுகம் செய்து வருகிறார்கள். அதற்கு என்ன விலை(?) கொடுக்கவும்தயாராக இருக்கின்றார்கள்.□
.வ்வரிகளின் அர்த்தம் எனது சிற்றறிவிற்குப் புரியவில்லை. என்ன விலையென்பதன்அர்த்தம் என்ன? பெண்விடுதலை பேசுபவர்கள்ஒழுக்கமற்றவர்கள்(?) எதையும் செய்ய துணிந்தவர்கள. இந்த எதையும் என்பதன் அர்த்தம்-எந்த ஆணுடனும் படுப்பார்கள். இந்த சந்திப்புகளுக்கு பெண்கள் வருவதே ஆண்களுடன் படுக்கத்தான் என்று ஆண்களால சொல்லப்படும் கதைகளுக்கு உங்கள் கருத்து ஒப்பானதாகவேயுள்ளது.

உங்கள் விமர்சனததில் பெயர் குறிப்பிடப்படாவிட்டாலும் நீங்கள் இங்குவிமர்சித்திருப்பது தோழி தேவா ஹெரோல்டை.
புகலிட இலக்கியத்திலும் சரி , இலக்கியம் மற்றும் நிகழ்வுகளியும் சரி தேவாவின் பங்கு அளப்பரியது. தொடர்ந்து எல்லா நிகழ்வுகளிலும் தன்னை இணைத்துக் கொண்டுதனது காத்திரமான பங்களிப்பைச் செய்து வருபவள். தானே முன்வந்து பொறுப்புக்களை

ஏற்று எந்தவித படோபமுமின்றி செய்து முடித்து. ஒருவருக்கும் தெரியாமல் ஒரு மூலையில்அமர்ந்திருப்பார். தன்னை அவர் எந்தவொரு குழுவினிலும் இணைத்துக் கொள்ளவுமில்லை. எமதுதுரதிஷ்டம். புகலிட இலக்கியச் சூழலின் அவலம். இன்றைய தனிப்பட்ட விரோதங்கள், குழுச்சண்டைகளிற்குள் தேவாவும் பகடைக்காயாகசிக்கித்தவிப்பதுதான். இவ்விமர்சனத்தைத் தொடர்ந்து, தம்மை எந்தப் பொதுவிடயங்களிலும் தம்மை இணைத்துக்கொள்ளாதவர்களும் தேவாவிற்கு எதிராக சேறு பூச முனைகிறார்கள்.

இலக்கியங்கள் இலக்கியங்களாகவிருக்கட்டும். ஒருவரது உழைப்பிற்கு மதிப்பளியுங்கள். ஒருவரையும் ஒருவர் விமர்சிக்ககூடாது என நான் கூறவரவில்லை. விமர்சனத்தில் உண்மையும், நேர்மையும் வேண்டும். வெறும் குழுச்சகதிக்குள் ஒருவரையும் முத்திரைக்குத்தி தள்ளிவிடாதீர்கள். இது நேர்மையானஇலக்கியத்திற்கு அழகல்ல

-உமா

| | |
|---|---|
| Sujet : | It´s only a matter of politics. |
| Date : | 14/06/01 18:33:17 Paris, Madrid (heure d'été) |
| De : | UMA109 |
| A : | kamalasany@gmx.net, bmt91@hotmail.com, Subashini_kanagasundaram@hp.com, Sivarajan@t-online.de, Thamilachi@hotmail.com(sumathi Ruban), praveen@bluewin.ch, Aazhiyaal@hotmail.com, sumathy@bluewin.ch, Kodangi_ajj@yahoo.com, danieljeeva@sympatico.ca, digi@yesic.com(Karuna), knavam@yahoo.com, kani@freesurf.ch, Shan04@infonie.fr, Jahirhus@hotmail.com, puthiyathadam@yahoo.com, Geswar@yahoo.com, rkandia@mailhost.tcs.tulane.edu, psivagami@hotmail.com, RAYAKARAN, Puvi76@callnetuk.com, Rathan@bathcom.com, KAVITHA2, Ranjith72@hotmail.com, karunah@hotmail.com, methiny@t-online.de, Sivapalan@t-online.de, Sriharan.Sivasingaraja@ism.uit.no, brigitte.huron@freesurf.fr, Shobasakti.@hotmail.com |

*It´s only a matter of politics.*

தங்களுக்கு ஸ்பார்ட்கஸ்தாசன் பாரதிதாசன் என்று பலபெயர்கள் இருந்தாலும் பதினைந்து வருடகாலம தங்களுடன் பழகிய தோஷத்தால் பாரதி என்றேவிழிக்கவிரும்புகிறேன்.

சபாலிங்கத்தின் கொலைக்குப் பின் பிரான்ஸில்நடைபெற்ற இலக்கியச்சந்திப்பின் சுயஅறிமுகத்தின்போது எழுந்து நின்று உனது கருத்துடன் எனக்குஉடன்பாடில்லையென்றாலும், உனது கருத்தை வெளியிடுவதற்கான சுதந்திரத்திற்காக உயிரையும்கொடுப்பேன்- என்ற பிரெஞ்சு தத்துவஞானியான வொல்டயரின் மேற்கோளைத் தாங்கள உச்சரிக்கும் போது நானும் மெய் சிலிர்த்து போனேன். தங்களிடம் இலக்கிய நேர்மையுண்டென்றும், பாரதி பொய் சொல்லமாட்டார் என்றும் இக்கணம் வரை என் மனதில்ஆழமாகப் பதிந்திருந்த நம்பிக்கையை பொய் என்ற கூரிய வளால் குத்திக் கிழித்து ஏழுகடலுக்கும் அப்பால் சுயநலமும், திட்டமிட்ட சேறடிப்பு குறுகிய குழுவாதம் என்பவற்றால் நாறிக் கிடக்கும் பாதாளத்துக்குள் எறிந்துவிட்டீர்கள்.

உயிர்நிழல்இதழ் 17ல் லக்சுமியினால் எழுதப்பட்டுவெளியான -- போதை கழற்றிய போர்வை -- என்ற குறிப்பிற்கு எதிர்வினையொன்றுஎழுதியனுப்பியிருந்தேன். அவவிமர்சனம் உயிர்நிழல் ஆசிரியர் குழுவினரால்நிராகரிக்கப்பட்டது. என்னுடையது போலவே தேவாவின் விமர்சனமும் நிராகரிக்கப்பட்டது. எமது கருத்துக்களை நிராகரித்தமை ஜனநாயக மறுப்புச்செயலாக நாம் கருதினோம். எமது ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்களின் செயற்பாடுகள் எப்படிஆண்களால் மேலாதிக்கம் செய்யப்படுகின்றதென்றும், பொதுவாழ்வில் ஈடுபடும் பெண்கள் எப்படிஇழிவுபடுத்தப்படுகிறார்கள், எமது இருப்பை நிலைநாட்ட நாம் எம்முன்னுள்ள எத்தனைத்தடைகளைத் தாண்டவேண்டியுள்ளது. இந்தவகையிலேயே தோழி லக்சுமி எழுதியகருத்துக்கள் பெண்களை இழிவுபடுத்தும்மோசமான, விமர்சிக்கப்படவேண்டிய கருத்துக்களாக் கருதியமையால் நான் அவரது கருத்துக்களை விமர்சித்தேன். தோழிலக்சுமியின் கருத்துக்களைத்தான் நான் விமர்சித்தேன் அன்றி தோழி லக்சுமியை அல்ல.
எமது விமர்சனங்கள் நிராகரிக்கப்பட்டதும் , தோழிலக்சுமியின் கருத்துக்களுக்கான மாற்றுக்கருத்துக்களின் முக்கியத்துவம் கருதியே நாம் இருவரும் கூட்டாக புகலிடசஞ்சிகைகளுக்கும், இலக்கியத்தில் ஈடுபாடுகொண்டோருக்கும்ஈமெயிலில் எமது விமர்சனங்களை அனுப்பியிருந்தோம்.
இக்கருத்துக்களின் முக்கியத்துவம் தங்களுக்கு விளங்கும் என்றுதெிர்பார்ப்பது முட்டாள்த்தனம் என்று எனக்கு இப்போது நன்கு புரிந்துவிட்டது.
தாங்கள்குறுகிய குழுவாதநலனுக்குள் சிக்கி ஏதாவது இல்லாத ஒன்றைகொண்டு சமப்படுத்தமுயற்சிப்பது சுத்தஅயோக்கியத்தனம்.

எனது விமர்சனத்தை உயிர்நிழல் போடாமையை நியாயப்படுத்தும்முகமாக என்னைப்பற்றி ஒரு அப்பட்டமானபொய்யொன்றை ஈமெயில் சுற்றுக்கு தாங்கள் விட்டிருக்கிறீர்கள்.
வோல்ரேயரின் கருத்தை மதிப்பவராகத் தங்களைஇனங்காட்டும தாங்கள் ஜனநாயகமறுப்பைவக்காலத்து வாங்கி நியாயப்படுத்துவதற்கு யாருடையாவது உயிரை எடுக்கவும் தயாராகியுள்ளீர்கள்.
நான் தேனியிலிருந்த போது மல்லி என்பவர்இலக்கியச்சந்திப்புப் பற்றி கட்டுரையொன்றை எழுதியனுப்பியதாகவும், நான் அதைபிரசுரிக்காமல் தடுத்ததாகவும் பொய்ப் புரளியொன்றைக் கிளப்பியுள்ளீர்கள். இத்தகையநிகழ்வு நடைபெறவில்லை. நான் எக்காலத்திலும் எந்தக் கருத்தையும் வெளியிடாது தடுககவில்லை.
மல்லி என்பவர் எப்போது, எந்தஇலக்கியச்சந்திப்புப்பற்றி , யாருக்கு அனுப்பினார் என்று பாரதிதாசனால் காட்டமுடியுமா?

எனக்கு ஒரேயொரு மல்லியைத் தான் தெரியும். தற்போதுலண்டனில் வசித்துவரும் மு.நித்தியானந்தனின் தங்கையின் கணவர். தற்போது இந்தியாவில்வசிப்பவர். இவரை நான் 1992ல் பரிசில் நடைபெற்ற இலக்கியச்சந்திப்பில்முதன்முறையாகவும், பின்பு 1993ம் ஆண்டு ஒல்லாந்தில் நடைபெற்றப் இலக்கிய சந்திப்பிலும்சந்தித்தேன். அவ்விரு இலக்கியசசந்திப்புகளில் மட்டும்தான் அவர் கலந்துகொண்டார். மல்லியினால் எமக்கு எந்தவொரு கட்டுரையுமஅனுப்பிவைக்கப்படவுமில்லை.அவரது கட்டுரையொன்றையும் நான் நிராகரிக்கவுமில்லை.
நானஅறிந்தவரையில் மல்லி நல்ல புகைப்படக்கலைஞன். அவரது ஆக்கங்கள் எதையும் நான்வாசிக்கவில்லை. அப்படி மல்லி எழுதியிருந்தால் நான் கட்டாயம் பிரசுரித்திருப்பேன். மல்லிஎழுதியிருந்தாலும் தூண்டில், அ.ஆ..இ.புதுமையை விட்டுத் தேனிக்கு அனுப்புவாரா என்பதும் கேள்வியே.
தங்களை இலக்கிய பிரமாக்கள் என்று நினைத்துக் கொண்டபலராலும் தேனி புறக்கணிக்கப்பட்டு வந்தது யாவரும் அறிந்ததே. அதைவிட, எழுதுவதை எல்லாம்பிரசுரிப்பார்கள் என்ற குற்றச்சாட்டும் எம்மேல் எப்போதும் இருந்தது.

என்மேல் வேண்டுமென்று சேறு அடிக்கவேண்டும்என்பதறகாகவும், ஜனநாயகவிரோதியாக காட்ட வேண்டும் என்பதற்காகவும்,உயிர்நிழலைப் பாதுகாக்கவும் பொய் வைத்து அடித்து தங்கள் இலக்கிய நேர்மையை கோட்டை விடுகிறீர்கள்.

கனவு கண்டு உளறும் பழக்கம் தங்களிற்கு இருப்பதாக ஒத்துக்கொண்டால் நீங்கள் தப்பிப்பிழைத்துப்போகலாம்.

தாங்கள்பிழைவிடவும், பின் திருத்தவும், பின் பிழை விடவும் --- நாங்கள் வெறும் கிள்ளுக்கீரைகள் அல்ல.
சேறடிக்க இதுவும் புதிய உத்தியோ?

உயிர்நிழலுக்குநாம் அனுப்பிய விமர்சனங்களை, ஈ-மெயிலில் அனுப்பி மூன்று மணித்தியாலங்களுக்குள்ளம்மிடமிருந்த ஈ-மெயில் விலாசங்களை அப்படியே காப்பியடித்து, ஆழுமளந் னால்பெண்கள் சந்திப்பை ஜனநாயக விரோத அமைப்பாக காட்டும் முயற்சியில் வெளிடப்பட்டதுண்டுப்பிரசுரம் எல்லோருக்கும் அனுப்பப்பட்டது. நாம் உயிர்நிழலின் ஜனநாயக மறுப்பைப் பேசும் போது, இதோ பார்பெண்கள் சந்திப்பிலும் ஜனநாயகம் இல்லையென்று காட்டி எமது கடித நிராகரிப்பைநியாயப்படுத்துவதற்காக இரண்டையும் முடிச்சுப்போட முயற்சிக்கப்பட்டது. அது போதாது என்றுசந்தேகம் கொண்ட தாங்கள் புதிய பொய்த்தகவல்களை உருவகித்து என்னை ஜனநாயகவிரோதியாகக் காட்ட முயற்சிக்கிறீர்கள்.

மூன் ( ஆழுமுஏநு ) க்கும் உங்களுக்கும் உள்ளஉறவு வெறும் ஊகமல்ல.

ஸ்பார்ட்டகஸ்தாசன்என்ற தங்கள் பெயரை சாபர்டாஜ்தாசன் என்றுமாற்ற உத்தேசமா?

*சுட்டும் விரலை நீட்டிஎதிரியைக் குற்றம் சாட்டுகையில்*
*மற்றைய மூன்று விரல்களும்உந்தன் மார்பினைக் காட்டுமடா.*

-உமா ( 14.06.01)

ை□□4

Sujet : man(u)playism
Date : 10/06/01 21:28:41 Paris, Madrid (heure d'été)
De : Santhush
A : Jeyaruban@sympatico.ca, M1a2n3o4, sarinigarsara@hotmail.com, mayurann@hotmail.com, SPremkumar, Surgeryjaffna@mail.ewisl.net, anill77@usa.net, sunildesa07_1999@yahoo.com, thava.guru@c2i.net, Sriharan.sivasingraja@ism.uit.no, nirupa50@hotmail.com, exil-inba@infonie.fr, thulachi@langoo.com, Theva29, thayanithi@yahoo.com, Tharshi@web.de, Susee@gmx.de, sumathy@bluewin.ch, Thamilachi@hotmail.com, Santhush, sakthinorway@online.no, rra@freesurf.ch, Shanranjini@yahoo.com, Rajesbala@hotmail.com, Nragavande@yahoo.com, parthipan@gmx.net, Kpsingam, nnirupa@yahoo.de, EXILFR, kodangi_aji@yahoo.com, kamalasany@gmx.net, kalachuvadu@vsnl.com, praveen@bluewin.ch, exil.jeba@wanadoo.fr, Inparani@hotmail.com, genga_mu@yahoo.com, cheran@cheran.net, Bharathidasan@yahoo.com, bmt91@hotmail.com, Assaie@hotmail.com, Aazhiyaal@hotmail.com, Shobasakthi@hotmail.com, brigitte.huron@freesurf.fr, RAYAKARAN, Subashini_kanagasundaram@hp.com, Karunah@hotmail.com, methiny@t-online.de, Sivarajan@t-online.de, Sivapalan@t-online.de, Puvi76@callnet.uk.com, Raathan@bathcom.com, KAVITHA2, Ranjith72@hotmail.com, kudil35@hotmail.com, Psivagami@hotmail.com, ravis@connection.com, kani@freesurf.ch, Vishnu@rathinaiyer.freeserve.co.uk, reva@slt.lk, KKR2951774, Shan04@infonie.fr, Jahirhus@hotmail.com, Puthiyathadam@yahoo.com, geswar@yahoo.com, rkandia@mailhost.tcs.tulane.edu, danieljeeva@sympatico.com, Pajayakaran@hotmail.com, digi@yesic.com, tbook@yesic.com(Selvam), naalai@yahoo.ca, knavam@yahoo.com, Nkannan@freenet.de

**Man(u)play,rk;**
(A written form of a cartoon)

பேர்லினில் நடைபெற்ற 20வது பெண்கள்சந்திப்பில்அதிரடி ழேவஉைந வெளியிட்ட ஜனநாயக, சமூக உரிமைகளுக்கான பயிற்சிக் களத்தின் நிர்வாகஇயக்குநர் திரு சோஉசவைைளதாசன் அவர்களைச் சந்தித்து பேட்டிகண்டோம். அவருடன் செயலாளர்நாயகம் அரைஸ்வரசவடந உம் உடன்இருந்தார்.

□□□□□□□□□□□□

பெண்களுக்கு ஜனநாயகத்தைக் கற்றுக்கொடுக்கும் உங்கள்திட்டத்தின் தேவைதான் என்ன?
இது காலத்தின் கட்டாயம்.

பெண்களுக்கு ஜனநாயகத்தைகற்றுக்கொடுக்கும் திட்டம்பற்றி சிறிது சொல்லுங்களேன்?
இச்சமூக அமைப்பில் பெண்கள் ஒடுக்கப்படுவோராய் இருப்பதனால்அவர்களுககு ஜனநாயகத்தைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. எனவே நாம்ஜனநாயகத்தை பயிற்றுவிக்கும் பட்டறைகளை உருவாக்கி வருகிறோம்.

மிகவும்அவசியமான பணி. வேறு திட்டங்கள் ஏதும் உண்டா?
தலித்துக்களிலும் இதே நிலமைகளைக் காணக்கூடியதாக இருக்கின்றது.எனவே தலித்துக்களுக்கும் எம் சேவையினை நீட்டிக்கும் நோக்கம் எமக்குண்டு.

பெண்கள்சந்தித்து, தமக்குள்ளேயே விவாதித்து, சண்டைபிடித்து, அழுது, பேசி,சிந்தித்து........நஉை....தாமே முடிவெடுக்கும் அரசியற் செயற்பாட்டிற்குள் நீங்கள் தொடர்சியாக மூக்கை நுழைந்துவருகிறீர்களாமே?
உங்கள் கேள்வி எனக்கு புரியவில்லை.
அரைஸ்வரசவடந: ( குறுக்கிட்டு ) மற்றது பெண்களும், ஆண்களும் இச்சமூகத்தின்பிரதிநிதிகளே.

பெண்கள்பற்றிய ஆண்வகை விமர்சனங்கள், பெண்கள்மீதானஆண்மிரட்டல்கள் என்பவற்றின்போது உங்கள் குரல்கள் கேட்கவில்லையே?
நாங்கள் எப்போது என்ன பேச வேண்டும் என்பதை நீங்கள் தீர்மானிக்கமுடியாது. எங்கள் தேவைக்கேற்றபடிதான் எங்கள் ஊவயவநஅநவெஇருக்கும்.

புகலிடப்பரப்பிலும்பெண்கள்மீதான உரிமை மீறல்கள் பல அண்மைக் காலங்களில நிகழ்ந்துள்ளன. இவையாவும்தனிநபர் முத்திரை குத்தல்களாக முடித்துவிடாமல் வளர்ச்சிப் போக்கின் பாதையில்,விமர்சன, சுயவிமர்சன தளத்தில் செய்யப்பட வேண்டியவைதான். பெண்கள்சந்திப்பில் இந்திசழஉநளள பெண்களினாலேயே நடத்தப் படுவதுதானே ஆரோக்கியமாகஇருக்கும்?
நீங்கள் என்ன சொன்னாலும் எங்கள் தலையீடு தவிர்க்க முடியாமல்இருந்து கொண்டேயிருக்கும்.

பெண்கள் அமைப்புகளில் ஆண்களின் தலையீடு என்பது இந்தியா, சீனா,கியூபா போன்ற நாடுகளில் ஜனநாயகமறுப்பு என்று கூறிக்கொண்டு ஜோர்ஜ் புஷ்,கிளின்ரன், ஜூனியர்புஷ், ஸ்ரூடர், ரோனி பிளேயர் வகையறாக்கள் தலையிடுவதுபோல் இல்லையா?
அரைஸ்வரசவடந: (குறுக்கிட்டு, உணர்சிவசப்பட்டவராய்.) ழெ உழஅஅநவெள

பெண்கள் சந்திப்பில் இதுவரை பேணப்படும் தனித்துவம் என்பதுஆண்இடையூறுகள், ஆண்களின் கருத்தியல் மேலாதிக்கங்களுக்கு இடம் கொடுக்காமல்வருவதேயாகும். அங்கே பேசப்படும் சுயாதீனமான, சுதந்திரமான கலந்துரையாடல்களை,உணர்வுப்பகிர்வுகளை வெளியில்விடுவதை பெண்கள் விரும்பாதது புரிந்து கொள்ளக்கூடியதுதான்.இல்லையா? இதை பெண்கள் சந்திப்பின் ஜனநாயகவிரோத செயற்பாடாகக் காட்டுகிறீர்களே?
இப்போதைக்கு எமது அழளெந இதுதான்.

முதலில்கேட்ட கேள்விக்கே வருகிறோம். பெண்கள் தாமே விவாதிக்கும் உரிமையை, அவர்களின் தனித்தியங்கும் அரசியல்

செயற்பாட்டை, அதற்கூடாக அவர்களின்தொடர்கின்ற பிரச்சனைகளில் முகங்கொடுக்கும் ஆளுமையை, நீங்கள் மறுக்கிறீர்களில்லையா?
நான் சொல்லவருவது, எப்போதோ இது எல்லோருக்குமான பொதுத்தள பிரச்சனையாகி விட்டது.

பொதுத்தளமென்பதுபெண்களின, பெண்கள்அமைப்புக்களின் நலன்களை, போராட்டங்களை நசுக்குவதாகவும்,கொச்சைப்படுத்துவதாகவும் பொதுவாக இருக்கின்றபோது. உங்களின் செயற்பாடானது பெண்களின் போராட்டத்திற்கு இடையூறாகதெரியவில்லையா?
இது பற்றி எங்களுக்கு அக்கறையில்லை. எங்கள் தேவைகளுக்கு இடையூறாகபெண்கள் சந்திப்பு இல்லாமல் இருந்தால் போதும்..
நன்றி, வணக்கம்.

(வெளியீடு மூவ நலையீடு: சந்தோஷ், ராகவன்.தேவகாந்தன்
பேர்லின்.10.06.01
உங்கள் கருத்துபரிமாற்றங்களுக்கு: ஸ்ரீநரேச.அழுரவா;37.உ.முஅ